Seniors Rights Victoria

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களோ தவறாக நடத்தப்பட்டால், **Seniors Rights Victoria** இனைத் தொடர்பு கொள்ளுங்கள்:

1300 368 821

Seniors Rights Victoria (SRV) அமைப்பு, தவறாக நடத்தப்படும் முதியவர்களுக்கு ஒரு மொழி பெயர்த்துரைப்பாளர் மூலம் உதவியை வழங்குகிறது. சேவைகளில் அடங்குபவை:

- தொலைபேசி உதவி எண். நீங்கள் SRV குரல் அஞ்சலைத் (voicemail) தொடர்பு கொள்ளலாம். உங்கள் அழைப்பிற்கு பதில் அழைப்பு விடுக்கப்படும்.
- இலவச ஆதரவு மற்றும் தகவல்.
- இலவச சட்ட ஆலோசனை.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இலவச மற்றும் இரகசிய ஆலோசனை

உதவி மற்றும் ஆலோசனை எங்கே கிடைக்கும்?

நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாரேனுமோ தவறாக நடத்தப்படுகிறீர்கள் என்றால், இந்தச் சேவைகள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் இலவசமாகவும் இரகசியமாகவும் வழங்கப்படுகின்றன.

Elders Rights Australia
1800 700 600
தகவல், பரிந்து பேசுதல் மற்றும் ஆதரவு

Office of the Public Advocate
1300 309 337
பாதுகாவலர் நியமனம், நிர்வாகம் மற்றும் அதிகாரப் பத்திரம் தொடர்பான ஆலோசனை

Carers Victoria
1800 514 845
பராமரிப்பாளர்களுக்கான ஆலோசனை மற்றும் ஆதரவு

Victoria Police **000**
நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களோ பாதுகாப்பற்ற அல்லது, உயிருக்கு ஆபத்தான் சூழ்நிலையில் இருந்தால்

Interpreter **13 14 50**

உங்களுக்கு ஒரு மொழிபெயர்த்துரைப்பாளர் தேவைப்பட்டால், தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவையை (TIS) அழைத்து, 'Seniors Rights Victoria' உடன் தமிழ் மொழியில் பேசக் கேளுங்கள்.

VICTORIA

©2026 Ethnic Communities' Council of Victoria
www.eccv.org.au

Tamil | தமிழ்

கண்ணியம் மற்றும் மரியாதை

குடும்பத்தினருடனானஉறவுகள் சீர்குலைந்தால் என்ன நடக்கும்?

நமக்கு வயதாகும்போது, நம்முடைய கண்ணியத்திற்கும் மரியாதைக்குமான உரிமை நம் அனைவருக்கும் உண்டு.

குடும்பங்களிலும் சமூகத்திலும் தீங்கு விளைவிக்கும் மற்றும் பாதுகாப்பற்ற நடத்தை ஏற்றுக்கொள்ள முடியாதது.

நீங்கள் இதைத் தனியாகச் சமாளிக்க வேண்டியதில்லை, உங்கள் குடும்பத்திற்கு வெளியேயும் உதவி கிடைக்கும்.

உங்கள் கண்ணியத்தையும் மரியாதையையும் மீட்டெடுக்க, உதவியும் ஆதரவும் உங்களுக்குக் கிடைக்கின்றன.

சமூகத்திலிருந்து வரும் கதைகள்

வார நாட்களிலும் வார இறுதிகளிலும் பேரக் குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும்படி என் மகள் என்னிடம் கேட்பாள். என் மற்ற செயல்பாடுகளை விட இது முக்கியமானது என்று அவள் சொல்கிறாள். நான் என் பேரக்குழந்தைகளை நேசிக்கிறேன், ஆனால் என் நண்பர்களைப் பார்க்கும் வாய்ப்பை இழக்கிறேன்.

என் கணவர் இறந்தபோது, நான் எங்கள் வீட்டை விற்றுவிட்டு என் மகனுடன் குடியேறி, அந்தப் பணத்தை அவனிடம் கொடுத்தேன். இப்போது என் பணத்தை என்னால் எடுக்க முடியவில்லை.மேலும் பணம் எங்கே இருக்கிறது என்பது பற்றி அவனிடம் பேசுவதற்கும் எனக்கு சங்கடமாக இருக்கிறது.

எங்கள் திருமணத்திற்குப் பிறகு நான் என் கணவருடன் ஆஸ்திரேலியா வந்தேன். அவர் என்னிடம் மோசமாக நடந்துகொள்கிறார், எப்போதும் என்னைத் திட்டுகிறார். எனக்கு நிரந்தர வதிவிட உரிமை இல்லை, மேலும் அவர் என்னை சொந்த நாட்டிற்குத் திருப்பி அனுப்பிவிடுவதாக வேறு மிரட்டுகிறார்.

முதியோரின் தேவைகளும் நல்வாழ்வும் மற்ற குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் போலவே முக்கியமானவை.

சில முதியவர்கள், தங்களுக்குத் தெரிந்த மற்றும் நம்பகமான நபர்களாலேயே கொடுமைப் படுத்துதலையோ அல்லது துன்புறுத்தலையோ அனுபவிக்கிறார்கள்.

தவறாக நடத்தப்படுதல் என்பது பல வடிவங்களில் உள்ளது. இது ஒரு முதியவரின் நிதி, உணர்ச்சி அல்லது உடல் நலத்தைப் பாதிக்கலாம்.

தவறாக நடத்தப்படுதல் வேண்டுமென்றே செய்யப்படலாம்.தங்கள் நடத்தை தங்களுக்கு விருப்பமானவர்களை எவ்வாறு பாதிக்கிறது என்பதை மக்கள் அறியாமலேயே கூட இது நிகழலாம்.

பாலினம், பண்பாடு அல்லது மதம் ஆகிய பாகுபாடின்றி எவர் வேண்டுமானாலும் தவறாக நடத்தப்படலாம்.

ஒரு முதியவர், குடும்ப உறுப்பினராலோ அல்லது நண்பராலோ தவறாக நடத்தப்படும்போது, அம்முதியவருக்கு இரகசியமான உதவிகள் கிடைக்கும்.